**செய்தி வெளியீடு எண் : 2185** **நாள் : 02.12.2022**

**செய்தி வெளியீடு**

**பெரியார் பன்னாட்டு அமைப்பு, அமெரிக்கா சமூகநீதிக்கான கி. வீரமணி விருதினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு வழங்கியது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இன்று (2.12.2022) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் திரு. கி. வீரமணி அவர்களின் 90-ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவில், பெரியார் பன்னாட்டு அமைப்பு - அமெரிக்கா சார்பில் “சமூகநீதிக்கான கி. வீரமணி விருது” அவ்வமைப்பின் இயக்குநர் டாக்டர் சோம இளங்கோவன் அவர்களால் வழங்கப்பட்டது.

இவ்விருது 1996-ஆம் ஆண்டு இந்திய முன்னாள் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள், 1997-ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. சீதாராம் கேசரி அவர்கள், 2000-ஆம் ஆண்டு உத்தர பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் செல்வி மாயாவதி அவர்கள், 2008-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 2015-ஆம் ஆண்டு பீகார் மாநில முன்னாள் முதலமைச்சர் திரு. நிதிஷ் குமார் அவர்கள் போன்ற தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு.கே.எஸ். அழகிரி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. வைகோ, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர்மொகிதீன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. தொல். திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. இரா. முத்தரசன், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. கே. பாலகிருஷ்ணன், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பொருளாளர் திரு. வீ. குமரேசன், துணை பொதுச் செயலாளர் திரு. ச. இன்பக்கனி, திரு. கி. வீரமணி அவர்களின் மனைவி திருமதி மோகனா அம்மாள் மற்றும் திராவிடர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

•••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in